සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

**Sabaragamuwa Provincial Department of Education**

පළමු වාර පරීක්ෂණය - 2016 | 10 ශ්‍රේණිය
முதலாம் தவணைப் பரீட்சை 2016 | தரம் 10
**First Term Test - 2016** | **Grade 10**

ව්‍යාපාර හා ගිණුම් කරණ අධ්‍යයනය I
***வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் 1***
***Business Studies and Accounting I***

*පැය එකයි*
**1 மணித்தியாலம்**
***one hour***

பெயர்/பரீட்சை இல :-
……………………………………………………………………………………………

*கவனத்திற்கு :*

- **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **1-10 வரையிலான வினாக்களுக்கு மிக பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1.

| பகுதி 01 | பகுதி 02 |
|---|---|
| 1. உணவு | A. காப்புறுதி |
| 2. உறைவிடம் | B. இணையம் |
| 3. கல்வி | C. மாடி வீடுகள் |
| 4. பாதுகாப்பு | D. பழங்கள் |

பகுதி 01 தேவைகளுடன் சரியாக பொருந்தும் விருப்பங்கள் முறையே,
1. 1-D, 2-A, 3-B, 4-C
2. 1-D, 2-C, 3-A, 4-B
3. 1-D, 2-C, 3-B, 4-A
4. 1-D, 2-A, 3-C, 4-B

2. உற்பத்தி பொருட்களின் பண்புகள் வருமாறு.
A. கட்புலனாகக் கூடியது.
B. சேமிக்க முடியாது.
C. தொட்டுணரக்கூடியது.
D. ஒரே வகையானது.

பின்வருவனவற்றுள் சேவை உற்பத்தி ஒன்றின் பண்புகளாவன,
1. A யும் B யும்
2. B யும் C யும்
3. A யும் D யும்
4. B யும் D யும்

3. வெவ்வேறான வணிக துறைகளில் பெண்களின் தொழில் பங்களிப்பு இன்றைய காலகட்டத்தில் அதிகமாக பரவி வருகின்றன. ஆவற்றுள் ஆடை கைத்தொழில், சிகை அலங்காரம் மற்றும் திண்பண்டங்களின் உற்பத்தியில் பெண்களின் பங்களிப்பானது,

1. பலமானது
2. வாய்ப்பானது
3. அச்சுறுத்தலானது
4. பலவீனமானது

4. வணிக வெளிச் சூழலும் அவற்றின் அம்சங்களும் முறையே பகுதி 1, 2 இல் தரப்பட்டுள்ளது.

| பகுதி 1 | பகுதி 2 |
|---|---|
| 1. பொருளாதார சூழல் | A. கணினி, மின்னஞ்சல் |
| 2. தொழினுட்ப சூழல் | B. விதிகளும் ஒழுங்கு முறைகளும் |
| 3. சட்டச் சூழல் | C. வேலையின்மையும் பணவீக்கமும் |

பகுதி 1 இற்கு பொருத்தமான சூழலின் அம்சங்கள் முறையே,

1. 1-A, 2-B, 3-C
2. 1-A, 2-C, 3-B
3. 1-C, 2-B, 3-A
4. 1-C, 2-A, 3-B

5. வணிக சூழலானது உள்ளக மற்றும் வெளியக சூழல் காரணிகள் ஆய்வு செய்யப்படுகின்றது. அவற்றுள் உள்ளக சூழல் காரணிகளை மற்றும் கொண்ட தொகுதி,

1. உரிமையாளர், முகாமையாளர், ஊழியர்கள்
2. உரிமையாளர், ஊழியர்கள், நுகர்வோர்
3. உரிமையாளர், நுகர்வோர், போட்டியாளர்கள்
4. உரிமையாளர், போட்டியாளர்கள், வழங்குனர்கள்

6.வணிகத்தின் நிதி முதலீட்டாளர்களே அதன் உரிமையாளர்கள் ஆவர். ஆகக்குறைந்த உரிமையாளர் ஒருவராகவும், ஆகக் கூடியது வரையறுக்கப்படாத உரிமையாளர்களைக் கொண்ட வணிக அமைப்பு,

1. தனியுடமை
2. பங்குடமை
3. கூட்டுறவு
4. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி

7. தனியார் துறை வணிகமானது இலாப நோக்கில் செயற்படுகின்றன. எனினும் சில நிறுவனங்கள் இலாப நோக்கற்று செயற்படுகின்றன. ஆவையாவன,

1. தனியுடமை
2. பங்குடமை
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
4. கூட்டுறவு சங்கம்

8. பின்வறுவனவற்றுள் வரையறுக்கப்பட்ட பொறுப்பு, சட்ட ஆளுமை, உரிமையாண்மையை மாற்றக்கூடிய தன்மையைக் கொண்ட வணிக அமைப்பானது,

1. பங்குடமை
2. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
3. கூட்டுத் தாபனங்கள்
4. திணைக்களங்கள்

9. தனியார் உடமை, பொது உடமை என்பவற்றின் அமைவாக பின்வரும் வணிக அமைப்பு தொகுதியை தெரிவு செய்க.

1. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் - கூட்டுறவு சங்கங்கள்
2. அரச கம்பனிகள் - கூட்டுறவு சங்கங்கள்
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் - அரச கம்பனிகள்
4. அரச கம்பனிகள் - திணைக்களங்கள்

10. வணிகத்தினை பருமன் அடிப்படையில் தெரிவு செய்கையில் பயன்படுத்தும் அளவு கோலானது,

1. ஊளியர்களின் எண்ணிக்கை
2. சந்தைப்பங்கு
3. முகாமைத்துவப் பயன்பாடு
4. சுனத்தொகையின் வலு

- 11 – 15 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் தரப்பட்ட அடைப்பினுள் அடையாளமிடுக.

11. ஒரு வணிகத்தின் ஒரே விதமான பொருட்கள், சேவைகளை உற்பத்தி அல்லது விநியோகம் செய்யும் தரப்பினர் ஊழியர் ஆவார். ( )

12. நுகர்வோரின் வாழ்க்கை மாற்றங்களானது வணிகத்திற்கு வாய்ப்புக்களாக காணப்படும் அதேவேளை இயற்கை சூழலுக்கு அச்சுறுத்தலாக அமைகிறது. ( )

13. 1980 ம் ஆண்டு பங்குடமை சட்டத்தின் படி பங்குடமை வணிகத்தின் ஆகக் கூடுதலான பங்காளர்கள் எண்ணிக்கை 20 ஆகும். ( )

14. இலங்கை துறைமுக அதிகார சபை, விவசாய காப்புறுதிச்சபை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன அரச கம்பனிகளுக்கு உதாரணங்களாகும். ( )

15. தனியார் வணிகமானது பதிவு செய்யப்பட்ட பின் வியாபார பதிவுச் சான்றிதழானது வியாபார நிறுவனத்தில் காட்சிப்படுத்தல் வேண்டும். ( )

- 16 – 20 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

16. வணிகத்திடம் இருந்து பொருட்களை கொள்வனவு செய்கையில் சாதாரண விலை, தரம் என்பன ..................................................................... எதிர்ப்பார்க்கப்படுகின்றன.

17. வணிகத்தின் உள்ளக சூழலை ஆய்வு செய்கையில் அதன் ...................................... மும் ....................................... ளும் அற்ந்துக் கொள்ளலாம்.

18. பாரியளவு முதலீட்டையும், எண்ணிறைந்த ஊழியர்களையும், அதிகமான சந்தைப் பங்கையும் உடைய வணிகமானது .................................................................. அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றது.

19. கூட்டுறவு சங்கமானது ...................................................................... சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும்.

20. அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுடனும், உரிய அமைச்சின் கீழும் செயற்படும் அரச நிறுவனம் ................................................................... ஆகும்.

The National e-Learning Portal for The General Education